# நன்றியுரை

“**இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதைகளில் பெண்ணியம்**” என்னும் பொருளில் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ள அனுமதியளித்த மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்ததும் முகமலர்ச்சியோடு இசைவு தெரிவித்து, கருத்தரங்கு பலவற்றிற்கு கரம்பற்றி அழைத்துச்சென்று இலக்கிய ஆளுமைகளை அறிமுகப்படுத்தியவர். ஆய்வுப்பணி தொடங்கிய நாள் முதல் இன்றுவரை ஆய்வினை நெறிப்படுத்தியவர். தன் எழுத்துகளால் இளைஞர் மத்தியில் தன்னம்பிக்கையை வளர்த்துவரும் சாத்தூர், ஸ்ரீ. எஸ். இராமசாமி நாயுடு ஞாபகர்த்தக் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும், நாகலாபுரம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வருமான **முனைவர் க. இராமச்சந்திரன்** அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

தங்களுக்கிருந்த பல்வேறு பணிகளுக்கிடையில் எனக்கென்று நேரம் ஒதுக்கி ஆய்வுகுறித்து தேவையான ஆலோசனைகளை வழங்கிய மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழியற்புலத் தலைவர் **முனைவர் மு.மணிவேல்**, தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் **முனைவர் ம. திருமலை**, **முனைவர் இரா. மோகன்**, காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் **முனைவர் பா. ஆனந்த குமார்** அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

சந்திக்கும் போதெல்லாம் என் ஆய்வுப்பணியைச் சிந்திக்கச் செய்து, உற்சாகத்தையும் பொறுப்பையும் ஊட்டிவரும் அருப்புக்கோட்டை, தேவாங்கர் கலைக் கல்லூரியின் மரியாதைக்குரிய **செயலர் திரு. கா.சு.ச. சவுண்டையா**, கல்லூரியின் சுயநிதிப்பிரிவு **இயக்குநர் பேரா.சொ.சங்கரவேல்**, கல்லூரியின் முதல்வர் **முனைவர் ப.ரவிக்குமார்** அவர்களுக்கும் கல்லூரியின் நிர்வாகத்தினர் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்சிந்தனைக்கு உரமிட்டு, எண்ணங்களை வளப்படுத்தி, அதனை எழுத்தில் காணவிரும்பிய நினைவில்வாழும், வாழ்த்தும் கல்லூரியின் சுயநிதிப்பிரிவு முன்னாள் இயக்குநர் **பேரா. க. துளசிராமன்** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்கண்ட பொழுதுகளிலெல்லாம் என்ஆய்வு குறித்து விசாரித்து, விரைவுபடுத்திய எமது கல்லூரியின் **தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்** மற்றும் **இதர துறைப் பேராசிரியர்களுக்கும்** படித்த பாடங்களை பகிரவாய்ப்பளித்து பொறுமை காக்கும் மாணவர்களுக்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

என் வளர்ச்சியைத் தன்வளர்ச்சியாக எண்ணி, என்மீது அக்கறையும் பெருமிதமும் கொள்ளும் பேராசிரியர்கள் **வீ. மகேஸ்வரன், முனைவர் சு. செந்தில் குமார். முனைவர் என்.கே. அழகர்சாமி** ஆகியோர்க்கு நன்றி நவில்கிறேன்.

ஆய்வுப்பணிக்கான விதையை என்னுள் விதைத்து, சிந்தனைக்கு நீருற்றி வாசிப்பு அனுபவத்தை வளர்த்துவரும் ஆசான்; நான் தொல்லை தரும் வேலைகளிலெல்லாம் அதனை அன்புத் தொல்லையாகக் கருதி ஆய்வேட்டினைப் பிழைத்திருத்தம் செய்து உதவிய காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் **முனைவர் ஆ. அழகுசெல்வம்** அவர்களுக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

தறியில் ஓடும் நாடாவோடு ஒவ்வொரு நாளும் ஓடி, முதல் தலைமுறை மாணவனாக என்னைப் பள்ளியில் அடியெடுக்கவைத்து இன்று முனைவர்பட்டம் வரை வளர்த்தெடுத்துள்ள என்பாசமிகு பெற்றோர் **திரு. சு.பொ. சுப்பிரமணியம் — மீனாட்சி** அவர்களின் பொற்பாதங்களில் நன்றி மலரினைக் காணிக்கையாக்குகிறேன்.

மனம்சோரும் வேளைகளில் செவிகொடுக்கும் தோழமைகள் **செ. பாலமுருகன், மு. ஜெயராமனுக்கும்**, புத்தகங்களைத் தேடி எடுப்பதிலும் இரவல் வழங்குவதிலும் பெருமகிழ்ச்சிகொள்ளும் தேவாங்கர் கலைக் கல்லூரியின் நூலகர் **ம. ராஜவேல்**, நூலக உதவியாளர்கள் **க. ஜெயகுரு நாராயணன்** மற்றும் **பொ. சுகஸ்தலா** ஆகியோர்க்கும் அருப்புக்கோட்டை கிளைநூலக நூலகர் **சுப்பிரமணியன்** அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

ஆய்வேட்டினை சிறந்த முறையில் தட்டச்சு செய்து கொடுத்த ரூபி கம்ப்யூட்டர் நிறுவன உரிமையாளர் **திரு. தொ. குமார்** மற்றும் உதவியாளர் **திருமதி மு. எஸ்தர்** அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**- சு.வேலவன்**